www.freetnbooks.com

V11M

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

## வகுப்பு 11

நேரம் : 3.00 மணி

**கணிதவியல்**

மதிப்பெண்கள்: 90

**பகுதி - I**

**i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

**ii) சரியான (ஏற்புடைய) விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **20×1=20**

1) m உறுப்புகள் கொண்ட ஒரு கணத்திலிருந்து n உறுப்புகள் கொண்ட ஒரு கணத்திற்கு வரையறுக்கப்படும் மாறிலிச் சார்புகளின் எண்ணிக்கை

a) mn b) m c) n d) m+n

2) X = {1, 2, 3, 4} மற்றும் R = {(1, 1), (1, 2), (1, 3), (2, 2), (3, 3), (2, 1), (3, 1), (1, 4), (4, 1)} எனில் R என்பது ________.

a) தற்சுட்டுத் தொடர்பு b) கடப்புத் தொடர்பு

c) சமச்சீர் தொடர்பு d) சமானத் தொடர்பு

3) 343ன் மடக்கை 3 எனில் அதன் அடிமானம்

a) 5 b) 7 c) 9 d) 6

4) $(x+3)^4+(x+5)^4 = 16$ன் மூலங்களின் எண்ணிக்கை

a) 4 b) 2 c) 3 d) 8

5) $f(\theta) = |\sin\theta|+|\cos\theta|, \theta\in R$ எனில் $f(\theta)$ அமையும் இடைவெளி

a) [0, 2] b) [1, 2] c) $[1, \sqrt{2}]$ d) [0, 1]

6) $\sin^{-1}\left(\frac{\sqrt{3}}{2}\right)$ ன் முதன்மை மதிப்பு ________.

a) $\frac{\pi}{2}$ b) $\frac{\pi}{6}$ c) $\frac{\pi}{4}$ d) $\frac{\pi}{3}$

7) ${}^{n-1}C_r + {}^{n-1}C_{r-1}$ = ________.

a) ${}^{n+1}C_r$ b) ${}^{n-1}C_r$ c) ${}^{n}C_r$ d) ${}^{n}C_{r-1}$

8) 5 நாணயங்களை சுண்டும்பொழுது ஏற்படும் விளைவுகளின் மொத்த எண்ணிக்கை ________ ஆகும்.

a) 5 b) 32 c) 10 d) 25

9) $\lim\limits_{x\to 0}\frac{xe^x - \sin x}{x} =$

a) 1 b) 3 c) 2 d) 0

10) $\frac{1}{2}+\frac{7}{4}+\frac{13}{8}+\frac{19}{16}+\dots\dots\dots$ என்ற தொடரின் மதிப்பு

a) 14 b) 7 c) 4 d) 6

11) y = −x என்ற கோட்டிற்கு (2, 3) என்ற புள்ளியின் பிம்பப்புள்ளி

a) (−3, 2) b) (−3, −2) c) (3, 2) d) (−2, −3)

12) 3x−y = −5 என்ற கோட்டுடன் $45^0$ கோணம் ஏற்படுத்தும் கோட்டின் சாய்வுகள்

a) (1, −1) b) $\left(\frac{1}{2}, -2\right)$ c) $\left(2, \frac{-1}{2}\right)$ d) $\left(1, \frac{1}{2}\right)$

13) $\begin{vmatrix} 3-x & -6 & 3 \\ -6 & 3-x & 3 \\ 3 & 3 & -6-x \end{vmatrix} = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வு

a) 6 b) 0 c) 3 d) −6

14) ஒரு வெக்டர் ஆயஅச்சுகளுடன் சமகோணத்தை ஏற்படுத்தினால் அக்கோணம்

a) $\cos^{-1}\left(\frac{1}{3}\right)$ b) $\cos^{-1}\left(\frac{2}{3}\right)$ c) $\cos^{-1}\left(\frac{1}{\sqrt{3}}\right)$ d) $\cos^{-1}\left(\frac{2}{\sqrt{3}}\right)$

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



15) $a = i - j + 5k$ மற்றும் $b = 3i - 2k$ எனில் $a.b =$ ______.

a) 1 b) 7 c) −7 d) 8

16) $y = mx+c$ மற்றும் $f(0) = f'(0) = 1$ எனில் $f(2)$ என்பது

a) 1 b) 2 c) 3 d) −3

17) $y = x^3-5x$ எனில் $y''' =$ ______.

a) 6 b) −5 c) $3x^2-5$ d) 6x

18) A மற்றும் B என்ற இரு சார்பிலா நிகழ்ச்சியில் $P(A) = 0.35$ மற்றும் $P(A\cup B) = 0.6$ எனில் P(B) ஆனது ______.

a) $\frac{5}{13}$ b) $\frac{1}{13}$ c) $\frac{4}{13}$ d) $\frac{7}{13}$

19) {1, 2, 3, .........20} என்ற கணத்திலிருந்து ஒரு எண் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த எண் 3 அல்லது 4 ஆல் வகுபடுவதற்கான நிகழ்தகவு ______.

a) $\frac{2}{5}$ b) $\frac{1}{8}$ c) $\frac{1}{2}$ d) $\frac{2}{3}$

20) Limit $\frac{a^x - b^x}{x} =$ ______.

a) log ab b) $\log\left(\frac{a}{b}\right)$ c) $\log\frac{b}{a}$ d) $\frac{a}{b}$

## பகுதி - II

**7×2=14**

**i) ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

**ii) கேள்வி எண் 30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

21) $n(A\cap B) = 3$ மற்றும் $n(A\cup B) = 10$ எனில் $n[P(A\Delta B)]$ ஐக் காண்க.

22) தீர்க்க: $\left|\frac{2}{x-4}\right| > 1,\ x \neq 4$.

23) இரண்டு வட்டங்களில், ஒரே அளவு கொண்ட வில்லின் நீளங்கள் $60^0$ மற்றும் $75^0$ -ஐ மையக் கோணங்களாகத் தாங்கும் போது அவ்விரு வட்டங்களுக்கான ஆரங்களின் விகிதம் காண்க.

24) FLOWER என்ற வார்த்தையில் உள்ள 6 எழுத்துக்களைக் கொண்டு Fல் தொடங்க வேண்டும். Rல் முடிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகளுடன் எத்தனை எழுத்துச் சரங்களை உருவாக்கலாம்?

25) ஒரு நேர்கோட்டிற்கு ஆதியிலிருந்து வரையப்படும் செங்குத்து நீளம் 12 மற்றும் x அச்சுடன் மிகை திசையில் ஏற்படுத்தும் கோணம் $150^0$ எனில் கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

26) $i + 2j + 3k$ மற்றும் $3i - 2j + k$ ஆகியவற்றை அடுத்தடுத்த பக்கங்களாகக் கொண்ட இணைகரத்தின் பரப்பளவைக் காண்க.

27) $\lim_{x\to 3}\frac{x^n - 3^n}{x-3} = 27$ எனுமாறு உள்ள மிகை முழு எண் nஐக் காண்க.

28) வகையிடுக: $y = e^x \sin x$

29) $P(A) = 0.52$, $P(B) = 0.43$ மற்றும் $P(A\cap B) = 0.24$ எனில் $P(A\cup B)$ மற்றும் $P(\overline{A}\cup\overline{B})$ ஐக் காண்க.

30) $A = \begin{bmatrix} 1 & 2 & 3 \\ 4 & 5 & 6 \\ 7 & 8 & 9 \end{bmatrix}$ என்ற அணி பூஜ்ய கோவை அணியா அல்லது பூஜ்ஜியமற்ற கோவை அணியா எனக் காட்டுக.

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



## பகுதி - III

i) ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
ii) வினா எண் 40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். **7×3=21**

31) $\frac{1}{1-2\sin x}$ என்ற சார்பின் சார்பகத்தைக் காண்க.

32) $x^2+px+8=0$ -ன் மூலங்களின் வேறுபாடு 2 எனில் p-ன் மதிப்புகளைக் காண்க.

33) $A+B=45^\circ$ எனில் $(1+\tan A)(1+\tan B)=2$ என நிறுவுக.

34) ஓர் அறக்கட்டளையில் 25 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில்
 i) 3 அதிகாரிகளை எத்தனை வழிகளில் தேர்ந்தெடுக்கலாம்?
 ii) ஒரு தலைவர், ஓர் உபதலைவர் மற்றும் ஒரு செயலரை எத்தனை வழிகளில் தேர்ந்தெடுக்கலாம்?

35) $6+66+666+6666+\ldots\ldots\ldots$ என்ற தொடரின் முதல் n உறுப்புகளின் கூடுதல் காண்க.

36) $(1, 3), (2, 1)$ மற்றும் $\left(\frac{1}{2}, 4\right)$ ஆகிய புள்ளிகள் ஒரே கோடமைவன எனக் காட்டுக.

37) $$\begin{vmatrix} a & b & c \\ b & c & a \\ c & a & b \end{vmatrix}^2 = \begin{vmatrix} 2bc-a^2 & c^2 & a^2 \\ c^2 & 2ca-b^2 & a^2 \\ b^2 & a^2 & 2ab-c^2 \end{vmatrix}$$ என நிறுவுக.

38) ABC என்ற முக்கோணத்தின் நடுக்கோட்டுச் சந்தி G எனில் $\overrightarrow{GA}+\overrightarrow{GB}+\overrightarrow{GC}=0$ என நிறுவுக.

39) கணிதவியல் ஒரு வினாவானது மூன்று மாணவர்களிடம் தீர்வு காண்பதற்காக கொடுக்கப்படுகிறது. அவர்கள் தனித்தனியே தீர்ப்பதற்கான நிகழ்தகவு 1/3, 1/4 மற்றும் 1/5 எனில் சரியாக ஒருவர் மட்டும் அந்த வினாவிற்கு தீர்வு காண்பதற்கான நிகழ்தகவு யாது?

40) $y=e^{\sin x}$ எனில் $\frac{dy}{dx}$ ஐக் காண்க.

## பகுதி - IV

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க:** **7×5=35**

41) $$f(x)=\begin{cases} -x+4 & ; -\infty < x \le 3 \\ x+4 & ; -3 < x < -2 \\ x^2-x & ; -2 \le x < 1 \\ x-x^2 & ; 1 \le x < 7 \\ 0 & ; \text{மற்ற இடங்களில்} \end{cases}$$ என வரையறுக்கப்படின் −4, 1, −2, 7, 0 ஆகியவற்றின் f-ன் மதிப்புகளைக் காண்க.

**(அல்லது)**

$12x^2+2Kxy+2y^2+11x-5y+2=0$ என்ற சமன்பாடு இரட்டை நேர்கோடுகளைக் குறித்தால் K-ன் மதிப்புக் காண்க. மேலும் அவற்றிற்கிடையான கோணம் காண்க.

42) நேப்பியரின் தேற்றத்தை எழுதி நிறுவுக.

**(அல்லது)**

f பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது $$f(x)=\begin{cases} 0 & ; x<0 \\ x & ; 0\le x<1 \\ -x^2+4x-2 & ; 1\le x<3 \\ 4-x & ; x\ge 3 \end{cases}$$

இந்தச் சார்பு தொடர்ச்சியானதா?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



43) ஒரு முக்கோணத்தின் நடுக்கோடுகள் ஒரு புள்ளியில் சந்திக்கும் என நிறுவுக.

**(அல்லது)**

GARDEN என்ற வார்த்தையில் உள்ள எழுத்துக்களை வரிசை மாற்றத்திற்கு உட்படுத்திக் கிடைக்கும். எழுத்துச் சரங்களை ஆங்கில அகராதியில் உள்ளது போன்று வரிசைப்படுத்தும் பொழுது

(i) GARDEN (ii) DANGER ஆகிய வார்த்தைகளின் தரத்தைக் காண்க.

44) x மிகச்சிறியது எனில் $\sqrt{\frac{1-x}{1+x}}$ என்பது தோராயமாக $1-x+\frac{x^2}{2}$ என நிறுவுக.

**(அல்லது)**

பகுதி பின்னங்களாக பிரிக்க: $\frac{7+x}{(1+x)(1+x^2)}$

45) $y=(\cos^{-1}x)^2$ எனில் $(1-x^2)\frac{d^2y}{dx^2}-x\frac{dy}{dx}-2=0$ என நிரூபிக்க.

**(அல்லது)**

கணிதத் தொகுத்தறிதல் முறையில் $n\geq 1$க்கு $1^3+2^3+3^3+\ldots\ldots\ldots\ldots+n^3=\left[\frac{n(n+1)}{2}\right]^2$ என நிரூபிக்க.

46) $4i+5j+k$; $-j-k$; $3i+9j+4k$ மற்றும் $-4i+4j+4k$ ஆகியவற்றை நிலைவெக்டர்களாகக் கொண்ட புள்ளிகள் ஒரு தள அமைவன எனக் காட்டுக.

**(அல்லது)**

$\log_2 x+\log_4 x+\log_{16} x=\frac{7}{2}$ எனில் xன் மதிப்பைக் காண்க.

47) ஒரு PVCயைத் தயாரிக்கும் நிறுவனம் X, Y மற்றும் Z என்ற மூன்று தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்கிறது. X, Y மற்றும் Zகளின் தினந்தோறும் உற்பத்தி செய்யும் பைப்களின் அளவுகள் முறையே 2000 அலகுகள், 3000 அலகுகள் மற்றும் 5000 அலகுகள் ஆகும். முந்தைய திறனைப் பொறுத்து X, Y மற்றும் Z ஆகிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பைப்களின் குறைபாடுகள் முறையே 3%, 4% மற்றும் 2% ஆகும். சமவாய்ப்பு முறையில் ஒரு நாள் உற்பத்தியான பைப்களிலிருந்து ஒரு பைப் தேர்ந்தெடுக்கும்பொழுது அது குறைபாடுள்ளதாக இருப்பின் அது தொழிற்சாலை Yன் உற்பத்தியானதற்கான இருக்க நிகழ்தகவு என்ன?

**(அல்லது)**

$$\begin{vmatrix}1 & x^2 & x^3\\1 & y^2 & y^3\\1 & z^2 & z^3\end{vmatrix}=(x-y)(y-z)(z-x)(xy+yz+zx)$$ என நிறுவுக.

----------

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner